# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2022-2023

## மானியக் கோரிக்கை எண்.53


## மு.க. ஸ்டாலின்
## முதலமைச்சர்



©

தமிழ் நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | | 1-2 |
| 2. | துறையின் முக்கிய செயல்பாடுகள் | | 3-7 |
| 3. | கண்காணிப்பு | | 7-8 |
| | 3.1 | கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு | 8-9 |
| | 3.2 | தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலை கண்காணிப்பு | 9-10 |
| | 3.3 | உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள் | 11-14 |
| | 3.4 | கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 15-16 |

| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 3.4.1 | நீர்வளங்களை மேம்படுத்துதல் | 16-18 |
| | 3.4.2 | வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல் | 18-21 |
| | 3.4.3 | அனைவருக்கும் வீடு | 21-22 |
| | 3.4.4 | கல்வித் தரத்தை உயர்த்துதல் | 23-26 |
| | 3.4.5 | சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல் | 27-29 |
| | 3.4.6 | அனைவரும் உள்ளடங்கிய சமூகம் (Social Inclusion) | 29-31 |
| | 3.4.7 | உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி | 31-34 |
| | 3.4.8 | திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு | 35-37 |

| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 3.4.9 | முறையான கடன் (Institutional Credit) | 37-39 |
| | 3.4.10 | மரபு மற்றும் பண்பாடு | 39-42 |
| | 3.4.11 | சுற்றுச்சூழல் சமநிலை | 43-44 |
| | 3.4.12 | தரவு நிர்வாகம் (Data Governance) | 45-48 |
| | 3.5 | மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் | 49-51 |
| | 3.6 | கள ஆய்வுகள் | 51 |
| 4. | முக்கிய செயல் திறன் குறியீடுகள் (Key Performance Indicators) | | 52-54 |
| 5. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன்முயற்சிகள் | | 54 |
| | 5.1 | 'நான் முதல்வன்' - தமிழ்நாட்டில் திறன் வளர்ப்பு பயிற்சியினை வலுப்படுத்த சிறப்பு முயற்சிகள் | 54-61 |

| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 5.2 | விளிம்பு நிலை மக்களின் நலம் | 61-65 |
| | 5.3 | தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் (**Tamil Nadu Chief Minister's Fellowship Programme)** | 65-72 |
| | 5.4 | முதலமைச்சரின் தகவல் பலகை (**Chief Minister's Dashboard)** | 72-74 |
| | 5.5 | கள ஆய்வுகள் கண்காணிப்பு கைபேசி மென்பொருள் செயலி | 74-77 |
| 6. | முடிவுரை | | 77-80 |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2022-23

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு சமூக நீதிக் கொள்கையின் அடிப்படை கோட்பாடுகளை வழிகாட்டியாகக் கொண்டு சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த நோக்கத்தினை செயல்படுத்திட ஏதுவான திட்டங்கள் மற்றும் கொள்கைகளுடனான வழிகாட்டியாக "**தலை நிமிரும் தமிழகம் தொலை நோக்குத் திட்டங்கள்**" திகழ்கிறது. தொலைநோக்குத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள பல இலக்குகள் மற்றும் துணை இலக்குகள் அரசின் பல்வேறு துறைகள் மூலம் அவ்வப்போது வெளியிடப்படும் கொள்கை

அறிவிப்புகள் மூலமாக திட்டங்களாக கொண்டு வரப்பட்டு அத்துறைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் பொருளாதார மேம்பாடு, வேளாண்மை, நீர்வள ஆதாரங்கள், கல்வி மற்றும் சுகாதாரம், நகர்ப்புர மேம்பாடு, ஊரக உட்கட்டமைப்பு மற்றும் சமூக நீதி ஆகிய ஏழு முக்கிய பிரிவுகளில் கவனம் செலுத்தி உருவாக்கப்பட்டு அதன்படி 10 ஆண்டுகளுக்குள் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியினை அடைதல் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் எந்த குடும்பமும் இல்லை என்ற நிலையினை அடையும் நோக்கத்தோடு திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் அவற்றின் உயரிய நோக்கத்தினை அடையும் வகையில் செயல்படுத்தப்படுவதை கண்காணிப்பது என்பது இத்துறையின் முக்கியப் பணியாகும்.

## 2. துறையின் முக்கிய செயல்பாடுகள்

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கு பின்வரும் முக்கியப் பணிகள் வழங்கப்பட்டுள்ளன:

- அரசின் கண்காணிப்பு அமைப்பாக செயல்படுவதற்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.

- சட்டமன்றப் பேரவை மற்றும் பல்வேறு அரசு விழாக்களில் வெளியிடப்படும் அனைத்துக் கொள்கை அறிவிப்புகளுக்குத் தேவையான ஆணைகள் வெளியிடப்படுவதை கண்காணிப்பதற்கும் மற்றும் அதன் செயலாக்கத்தினை கண்காணிக்கவும் சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

- அரசின் 'முதன்மைத் திட்டங்களின்' பயன் உரிய நேரத்தில் தகுதியுள்ள பயனாளிகள் அனைவரையும் சென்றடைவதை உறுதி செய்ய தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.

- திட்டங்களின் முன்னேற்றத்தின் தரம் மற்றும் அளவீடுகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிப்பதுடன், தேவையான இடங்களில் திருத்த நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்கும் உரிய கண்காணிப்பு அமைப்பாக செயல்படுதல்.

- சம்மந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலமாக திட்டங்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துதல்.

- மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் கள ஆய்வுகள் மற்றும் ஆய்வறிக்கைகளை தொகுத்து அதன் அடிப்படையில் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்புவதன் மூலம் அத்துறைகள் தங்கள் திட்டங்களில் தேவையான திருத்தங்கள் / மாற்றங்கள் மேற்கொள்ள உதவுதல்.

- கண்காணிப்பினை வலுப்படுத்த ஏதுவாக தேவையான நேர்வுகளில், அரசுத் துறைகள் மற்றும் அவற்றின் முகமைகள், தங்களுடைய ஆய்வுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஏதுவாக ஆய்வுக்கான படிவங்களை உருவாக்குவதற்கு உதவுதல், துறை சார்ந்த திட்டங்களின் முக்கிய செயல்திறன் குறியீடுகளை கண்டறிதல் மற்றும் துறைகளின்

கள ஆய்வுப் பணிகளுக்கு உதவுதல் போன்ற பணிகளை செய்தல்.

- பிற மாநிலங்கள் / நாடுகளின் பல்வேறு துறைகளில் சிறப்பான நடைமுறைகளை ஆய்வு செய்து அவற்றில் பொருத்தமானவற்றை நமது மாநிலத்தில் செயல்படுத்த தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.

- முக்கியமான திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதற்காக தொடர்புடைய துறைகளுடன் சிறப்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

- அவ்வப்போது அரசால் இத்துறைக்கு வழங்கப்படும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட பணிகளைத் திறம்பட நிறைவேற்றும் பொருட்டு, கள அனுபவம்

மற்றும் கள நிபுணத்துவம் கொண்ட அலுவலர்கள் தொடர்புடைய பல்வேறு துறைகளிலிருந்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் பணியமர்த்தப் பட்டுள்ளார்கள்.

**3. கண்காணிப்பு**

கண்காணிப்பு என்பது தகவல்களை முறையாக சேகரித்து, பகுப்பாய்வு செய்து அதன் மூலம் ஒரு திட்டத்தின் முன்னேற்றம் அதன் இலக்கை நோக்கி பயணிப்பதை உறுதி செய்வதோடு, திட்டத்தை செம்மைப் படுத்துவதற்கு தேவையான இடைநிலைத் திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை வழி நடத்துதல் ஆகும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்களின் செயல்

நிலையை சேகரித்து பதிவு செய்கிறது. முக்கிய ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளையும், உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களுக்கான பகுப்பாய்வு அறிக்கைகளையும் அவ்வப்போது தயார் செய்கிறது. அவ்வகையில், கண்காணிப்புத் தொடர்பான பின்வரும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1. கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள்,

மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் இதர அரசு விழாக்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் நிறைவேற்றத்தினை கண்காணிப்பதே சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கியப் பணியாகும்.

## 3.2 தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலை கண்காணிப்பு

தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைச் சார்ந்த கொள்கை அறிவிப்புகளின் நிலையைப் பதிவு செய்வதற்காக ஊடாடும் வலைப்பக்கத்தை (Interactive Webpage) இத்துறை வடிவமைத்து தலைமைச் செயலக உள்வலைய (Intranet) இணையத்தில் நிர்வகித்து வருகிறது. பல்வேறு வகையான பகுப்பாய்வு அறிக்கைகளை தயாரிக்கத் தேவையான கண்காணிப்பு மென்பொருளும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருளில் தேவைக்கேற்ப மாறுதல்கள் அவ்வப்போது இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர்புடைய துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் நிலையினை உள்வலைய இணையப் பக்கத்தில் தொடர்ந்து பதிவு செய்திட ஏதுவாக அரசின் அனைத்து நிர்வாகத் துறைகளும், தங்கள் துறைச் சார்ந்த "தொடர்பு அலுவலர்களை" (Nodal Officer) நியமித்துள்ளன.

நிகழ்நிலை கண்காணிப்பில் பல்வேறு துறைகள் தெரிவிக்கும் முன்னேற்ற விவரங்களின் அடிப்படையில் அறிவிப்புகளின் செயல்பாட்டு நிலை வகைப்படுத்தப்பட்டு, தொகுப்பு அறிக்கைகள் உருவாக்கப்பட்டு, அவ்வப்போது நடத்தப்படும் பல்வேறு ஆய்வு கூட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 3.3. உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள்

அரசால் வெளியிடப்படும் பல்வேறு கொள்கை அறிவிப்புகளுக்கான ஆணைகள் மற்றும் அதன் செயலாக்கத்தினை உயர் மட்ட அளவில் ஆய்வு செய்யப்படுவதன் மூலம், அனைத்து அறிவிப்புகளும் களத்தில் செயல்படுத்தப் படுவதையும் மற்றும் அதன் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்யப்படுகிறது. அரசின் முதன்மைத் திட்டங்கள், நலத்திட்டங்கள், உட்கட்டமைப்புத் திட்டங்கள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு போன்ற திட்டங்களின் பலன் உரிய பயனாளிகளை சென்றடைவதை கண்காணிக்கும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கீழ்கண்ட உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16.09.2021 மற்றும் 11.01.2022 ஆகிய தேதிகளில் அனைத்து அரசு செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இதுபோன்ற ஆய்வுக் கூட்டங்கள் ஆண்டுக்கு இரண்டு முறை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் வன அலுவலர்கள் மாநாடு 10.03.2022 முதல் 12.03.2022 வரை நடத்தப்பட்டது.

- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் அனைத்து செயலாளர்களுடன் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

- அரசுத் துறைகளின் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலாளர் அவர்களால் நவம்பர் 2021 முதல் ஏப்ரல் 2022 வரை துறைவாரியான விரிவான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், இதுபோன்ற விரிவான துறைவாரியன ஆய்வுக் கூட்டம் வருடத்திற்கு இரண்டு முறை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தால், தேவையான நேர்வுகளில் ஒருங்கிணைப்பு கூட்டங்கள் சம்மந்தப்பட்ட துறைகளுடன் நடத்தப்படுகிறது.

- கருப்பொருள் அடிப்படையிலான (Thematic Based) கண்காணிப்பு கூட்டங்கள் கருப்பொருளுடன் தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் தேவையின் அடிப்படையில் நடத்தப்பட உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள உயர்நிலை ஆய்வுக்கூட்டங்களுக்கு தேவையான ஆய்வுக்குறிப்புகள், கையேடுகள், முக்கிய செயல்திறன் குறியீடுகள் (Key Performance Indicators) இத்துறையால் தயார் செய்யப்படுகிறது. குறிப்பாக, தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளின் செயல்பாட்டு நிலை, பல்வேறு தளங்களில் அறிவிக்கப்பட்ட கொள்கை அறிவிப்புகளின் செயல்பாட்டு நிலை, முதன்மைத் திட்டங்கள் மற்றும் பல்வேறு நலத் திட்டங்களின் செயல்பாட்டு நிலை, முந்தைய ஆய்வுக் கூட்ட குறிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு துறைகளின் மாவட்ட அளவிலான மற்றும் கள அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் ஆகியவை குறித்த ஆய்வுக் கூட்ட அறிக்கைகளை தயாரிக்கும் பணியினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## 3.4. கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

திட்ட செயலாக்கத்தின் பலன்களை முழுமையாக அடைவதற்கு தொடர்புடைய துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு முயற்சி என்பது மிக முக்கியமான ஒன்றாகும். தொலைநோக்கு திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகள் பல்வேறு நிர்வாகத் துறைகளின் செயலாக்கத்தின் கீழ் வருகின்றன. அரசின், மக்களின் நலன் மற்றும் வளர்ச்சி சார்ந்த இலக்குகளை தொடர்புடைய துறைகள் ஒன்றிணைந்து சீரிய ஒத்துழைப்பு நல்குவதன் மூலம் சிறப்பாக நிறைவேற்றிட முடியும். இலக்குகளை அடைவதற்காக கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு அணுகுமுறை இத்துறையால் பின்பற்றப்படுகிறது, இதில், பொதுவான நோக்கத்தை கொண்டுள்ள இலக்குகள்

தொகுக்கப்பட்டு, திட்டங்களின் செயலாக்கம் ஒருங்கிணைந்த முறையில் கண்காணிக்கப்படுகிறது.

திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை களைவதற்குரிய நுண்ணிய வழிமுறைகளை இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை அளிக்கின்றது.

திறம்பட்ட முழுமையான கண்காணிப்பிற்கு பின்வரும் பன்னிரெண்டு கருப்பொருள் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன:

### 3.4.1. நீர்வளங்களை மேம்படுத்துதல்

தங்கு தடையின்றி குடிநீர் மற்றும் பாசனத்திற்கு தேவையான நீரினை நிலையாக வழங்குவதை உறுதி செய்திட நிலத்தடி நீர் மட்டம், மேற்பரப்பு நீர் சேமிப்புத் திறன், மண்ணின் ஈரப்பதம், பசுமை பரப்பு ஆகியவற்றை அதிகரிப்பது என்பது மிகவும் அவசியமாகிறது. நீர்வளத்தை மேம்படுத்த

மேற்கொள்ளப்படும் நீர்நிலைகள் பாதுகாப்பு, ஆறுகள் பாதுகாப்பு, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், மண் வளம் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, கழிவு நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு, கழிவு நீர் மேலாண்மை, காடு வளர்ப்பு போன்ற திட்டங்கள், நீர்வளம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம் ஆகிய பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர்நிலைகளின் அளவீடுகள் அடங்கிய பதிவுகள், ஆக்கிரமிப்புகளை அடையாளம் காண்பது மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து நீர்நிலைகளை பாதுகாத்தல் ஆகியவற்றில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பங்கு இன்றியமையாததாகிறது. நீர்வளங்களை மேம்படுத்துதல், நீர் வீணாவதை தடுப்பது, மறுசுழற்சி செய்யப்பட்ட நீரினைப்

பயன்படுத்துவதை அதிகரிப்பது போன்ற நிலையான நீர் இருப்புக்கான அரசின் தொலைநோக்கு திட்டத்தை விரைவாக அடையச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையானது, இக்கருப்பொருள் தொடர்புடைய அனைத்து துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைக்கும்.

### 3.4.2. வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல்

விதைகள் மற்றும் நாற்றுகள், போதுமான பாசன நீர், உரங்கள், வேளாண் இயந்திரமயமாக்கல், சூரிய ஒளி சக்தியை பயன்படுத்துதல், அங்கக வேளாண்மைக்கான இடுபொருள்கள், பயிர்க் கடன் மற்றும் விரிவாக்க நடவடிக்கைகள் போன்றவை வேளாண் உற்பத்தி மற்றும் விளைச்சலை பெருக்குவதற்கு தேவைப்படும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த

செயல்பாடுகள் ஆகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகியவை வேளாண் பொருட்களின் பின்செய் நேர்த்தி நிலையில் விளைபொருட்களை கொள்முதல் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் முக்கிய பங்களிக்கிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை போன்றவை உழவர்களுக்குத் தேவையான மேற்கண்ட உதவிகளை நேரடியாக செய்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய கைபேசி செயலி, இணையத்தை இணைத்து பயன்படுத்தும் சாதனங்கள், தொலையுணர்வு தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலமாகவும் இத்துறை தனது பணியினை சிறந்த முறையில் செயல்படுத்த உதவுகிறது. மாநிலத்தின்

முதன்மைத் திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலமாக செயல்படுத்தப்படும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறான ஒருங்கிணைந்த முயற்சியினை தொடர்புடைய துறைகள் மேற்கொள்வதுடன், நீர்வளத் துறை செயல்படுத்தும் தடுப்பு அணைகள் திட்டத்தில் கட்டப்படும் தடுப்பு அணைகளை தேவைப்படும் இடத்தில் முறையாக தேர்வு செய்து கட்டப்படும் பட்சத்தில், நீண்டகால தரிசு நிலங்களையும், மானாவாரி நிலங்களையும் விவசாய பயன்பாட்டிற்கு கொண்டு வருதற்கான வாய்ப்புகள் ஏற்படும். தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டங்களான 11.75 இலட்சம்

எக்டர் கூடுதலாக பயிரிடுதல், 10 இலட்சம் எக்டர் அளவுள்ள இருபோக சாகுபடி நிலங்கள் இரு மடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவு தானியங்கள் மற்றும் தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகத்தை இடம் பெறச் செய்தல் போன்ற நோக்கங்களை பத்தாண்டுகளுக்குள் நிறைவேற்றுவதற்கு சம்மந்தப்பட்ட துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதை இத்துறை கண்காணிக்கும்.

### 3.4.3. அனைவருக்கும் வீடு

வீட்டுவசதித் திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை – தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – தமிழ்நாடு ஆதிதிராவிடர் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளின் மூலம் தகுதிவாய்ந்த நகர்ப்புர மற்றும் ஊரக ஏழை மக்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் வருவாய்த்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. புதுமையான, விரைவான கட்டுமானத் தொழில்நுட்பத்தை செயல்படுத்திட பொதுப்பணித் துறையின் ஆலோசனையும் பெறப்பட வேண்டிய அவசியம் உள்ளது. "10 ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில் 20 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் மற்றும் நகர்ப்புரங்களில் 9.75 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டப்படும்" என்ற இந்த அரசின் தொலைநோக்கு இலக்கை விரைவாக அடைய தொடர்புடைய துறைகளுக்கு இடையே தேவையான தகவல் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முனைப்புடன் ஏற்படுத்தும்.

### 3.4.4. கல்வித் தரத்தை உயர்த்துதல்

அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளிகளில் பயில்வதற்குரிய வாய்ப்பும், அதன் மூலம் அவர்கள் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதற்குத் தேவையான அனைத்தும் உள்ளடக்கிய, தரமான கல்வியை அனைத்து பள்ளிகளிலும் வழங்குவதே பள்ளி கல்வித் துறையின் முக்கிய நோக்கமாகும். கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்புகளை ஈடுசெய்யும் நோக்கத்தில், 'இல்லம் தேடி கல்வி' என்ற முதன்மைத் திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. 'எண்ணும் எழுத்தும் இயக்கம்' ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளிடையே, எழுத்தாற்றல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய துறைளால் நடத்தப்படும் பள்ளிகள் உட்பட அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், கற்றல் அடைவுகளை சிறந்த வகையில் பெறுவதற்குரிய நடவடிக்கைகளான திறன் வகுப்பறை, உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள், நூலகங்கள் ஆகியவையும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

வேகமாக வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாக பாடத்திட்டங்களை தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதுப்பித்து புதிய மற்றும் கூடுதல் பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துதல் நவீன தொழில்நுட்பங்களை கற்பிக்கும் வகையில் அவற்றை பள்ளி மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் சேர்த்தல் என்பது அவசியமாகியுள்ளது. தொழிற்பயிற்சி நிறுவன பயிற்றுநர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்

அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையிலான தொடர் பயிற்சி அளிப்பதும் அவசியமாகிறது. தொழில்பயிற்சி நிறுவனங்கள் தற்போது தொழில்துறை 4.0 தரநிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. இவையனைத்தும், எப்போதும் வளர்ந்து கொண்டேயிருக்கும் தொழில்நுட்பத்தின்படி தொழில் நிறுவனங்களின் மாறிவரும் திறன் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், இளம் தலைமுறையினரை எதிர்கால தேவைக்கேற்ப தயார்படுத்துவதற்கும் அவசியமானதாகும். வழிகாட்டுதல் (Mentorship) மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் (Career Guidance) ஆகியவை பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி பாடத்திட்டத்தில் ஒரு அங்கமாக உருவாகியுள்ளது.

தரமான கல்வி வழங்கப்படுவதை குறிக்கும் செயல்திறன் குறியீடுகளை அடைவதற்கு, பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி துறைகள்

முக்கிய பங்காற்றினாலும், அவற்றுக்கு இணையாக பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், சமூக நலம் மற்றும் மகளிர் அதிகாரமளித்தல் ஆகிய துறைகளின் மூலம் தரமான கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், சுகாதாரம் பேணுதல் மற்றும் ஊட்டச்சத்து அளித்தல் ஆகிய பங்களிப்புகள், தரப்படுத்தல் குறியீட்டெண்(Performance Grading Index) / தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) ஆகியவற்றின் தரவரிசையில் உயர்நிலையை அடைவதற்கும், தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார பேரவை (NAAC) போன்ற அமைப்புகளின் அங்கீகாரத்தை பெறுவதற்கும் உதவும். எனவே, கற்றல் விளைவுகளை மேம்படுத்த இத்துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

### 3.4.5. சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல்

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 3ன் குறிக்கோளான, அனைவருக்கும் "ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" என்கிற நிலையை அடைவதற்கு, பொது சுகாதாரத்தை பராமரித்தலும், தரமான மருத்துவக் கல்வியும், வலுவான மருத்துவ கட்டமைப்பும் அவசியமானதாகும். தற்போதைய சூழ்நிலையில், கோவிட் 19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள இடைவெளியை சமன் செய்வது என்பதும் முக்கியமானதாக உள்ளது. கடந்த ஆண்டு அரசால் தொடங்கப்பட்ட முதன்மைத் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைச் சென்றடைவதில் இருந்த சவால்களை களைந்து, மருத்துவ சேவையை இல்லங்களுக்கே சென்று வழங்கிடுவதற்கான வழிவகையை உருவாக்கியுள்ளது. சிசு இறப்பு விகிதம், மகப்பேறு இறப்பு விகிதம், ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற

முக்கிய சுகாதாரக் குறியீடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், இக்குறியீடுகளை மேம்படுத்துவற்கு, தாய்-சேய் நலத் திட்டங்கள் மற்றும் அங்கன்வாடிகளில் குழந்தைகளின் வளர்ச்சிக் கண்காணிப்பு (Growth Monitoring) ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இவற்றைத் தவிர, தூய்மையான சூழலை பேணும் கட்டமைப்பு, அனைத்து வயதினரிடையேயும் தனிநபர் சுகாதாரப் பழக்கத்தை ஊக்குவித்தல், அங்கன்வாடிகள் மற்றும் பள்ளிகளில் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவை, ஊட்டச்சத்து குறைபாடுகளை தடுப்பதற்கும், தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கும் வழிவகுக்கும்.

இவை அனைத்தும் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, பள்ளிக் கல்வி, பொதுப்பணி, நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல், மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி போன்ற துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலம் அடைந்திட இயலும்.

### 3.4.6. அனைவரும் உள்ளடங்கிய சமூகம் (Social Inclusion)

'எவரும் விடுபடாமல், அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சென்றடைவதை உறுதி செய்வதே சமூக உள்ளடக்கத்தின் நோக்கமாகும். இருப்பினும், விளிம்புநிலையில் உள்ளவர்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், மகளிர் மற்றும் முதியோர்கள் ஆகியோரின் வாழ்வினை மலரச் செய்யக்கூடிய, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள், பாலின சமத்துவம், வாழ்வாதார

மேம்பாட்டு நடவடிக்கைகள், உரிமைகள் திட்டம் (RIGHTS PROJECT), மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 போன்ற திட்டங்கள் மற்றும் சட்டங்களை செயல்படுத்துவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும், தொடர்புடைய துறைகளிடையேயான ஒருங்கிணைந்த நடவடிக்கை அவசியமாகிறது. ஆதிதிராவிடர் நலம், பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாடு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, மாற்றுத் திறனாளிகள் நலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், பொது மற்றும் உள்துறை ஆகிய துறைகள், இந்த அரசின் உன்னதமான தொலைநோக்கு திட்ட

இலக்குகளை அடைய ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது.

### 3.4.7. உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தற்போது தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக விளங்கி வருவதுடன், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும் திகழ்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 2030-31 ஆம் நிதியாண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சியடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை சாத்தியப்படுத்துவதற்கு தொழில்துறையின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். தொழில் உற்பத்தித் துறையில் ரூ.23 இலட்சம் கோடி அளவிற்கு முதலீட்டை ஈர்த்திடவும், 46 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், வளர்ச்சி இலக்கை அடையத்

தேவையான பல நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. வழிகாட்டி(Guidance) நிறுவனம் மூலம் தமிழ்நாட்டில் முதலீடுகள் ஈர்த்தல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றிற்கான சூழல் அமைப்பினை (Eco System) மாற்றி அமைத்திடுவதன் மூலம் மாநிலத்தில் தொழில்துறை வளர்ச்சியை வேகப்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மின்னணு, ஆட்டோ உதிரி பாகங்கள், தொழிற்பூங்காக்கள், தடையில்லா வர்த்தகக் கிடங்கு மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், பொது உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், காலணி, மருந்து மற்றும் ஜவுளி, அத்துடன் மரச்சாமான்கள் உற்பத்தி, மின்சார வாகனங்களுக்கான மின்னேற்று உட்கட்டமைப்பு ஆகிய குறிப்பிட்ட துறைகளில் மிகப் பெரிய அளவில் முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்த அரசு, மிகப் பெரிய தொழிற்பூங்காக்கள், பெரிய தொழில்துறை கூடங்கள், மிகப் பெரிய அளவிலான தொழிற் பேட்டைகள், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) மூலமாக தொழில் துவங்குவதற்கும், தொழில் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை மூலம் மாநிலத்தின் தொழில் துறையின் மேம்பாட்டிற்காக ஒற்றை சாளர இணையதளம் வாயிலாக முதலீட்டு வசதி மற்றும் பின்பராமரிப்பு வசதிகள் செய்யப்படுகின்றன. இத்துறையானது மேற்கண்ட திட்டங்களை, உயர்நிலையில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுப்பதன் மூலம் மொத்த மாநில உற்பத்தியில் அதிகபட்ச பங்கை தொழில் துறை பதிவு செய்வதற்குரிய சூழலை ஏற்படுத்திட உதவிடும்.

மேலும், முதலீடுகளை ஈர்ப்பதற்கு சாலை, இரயில் மற்றும் விமான இணைப்பு, நீர், மின்சாரம் மற்றும் சந்தை உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற வலுவான உள்கட்டமைப்பு வசதி தேவைப்படுகிறது. போக்குவரத்து, தொழில் எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள், பொதுப்பணி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம் போன்ற துறைகள் தொழில் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் வலுவான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முடியும். தேவைகளுக்கு ஏற்ப, தொடர்புடைய துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்துவதற்கான முன்னெடுப்பினை இத்துறை மேற்கொள்ளும்.

### 3.4.8. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு

தமிழ்நாட்டின் வளமான மனிதவளம், மாநிலத்தில் முதலீட்டை ஈர்ப்பதற்கு முக்கிய காரணியாக விளங்குகிறது. மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான மிக முக்கிய காரணிகளில் ஒன்றாக 'திறன் மேம்பாடு' விளங்குகிறது. எனவே, இளைஞர்களிடையே உள்ள திறன் இடைவெளிகளை பகுப்பாய்வு செய்து, அவர்களுக்கு உரிய திறன் பயிற்சிகளை அளித்து, அதன் மூலம் அவர்கள் தரமான வேலைவாய்ப்பினை பெறுவதற்குரிய தகுதியை ஏற்படுத்துவது அல்லது அவர்களை வெற்றிகரமான தொழில் முனைவோராக மாற்றுவது போன்ற நடவடிக்கைகளில் அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, பள்ளிக் கல்வி, தொழில், உயர்கல்வி, குறு, சிறு

மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் ஆகிய துறைகளின் திட்டங்களின் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அத்தகைய பயிற்சிகள் அனைத்தும், தேவைப்படும் நபர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதும், பயிற்சி முடித்த நபர்கள், வேலைவாய்ப்பை பெறுவது என்கிற வரையில் அல்லது அவர்கள் விரும்பும் சொந்த வணிக அமைப்புகளைத் தொடங்குவது வரை அவர்களை பின்தொடர்ந்து உதவுதல் என்பது முக்கியமானதாகும்.

அரசின் முதன்மைத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டம், 01.03.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாணவர்கள் மற்றும்

இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கும், தொடர்புடைய துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து சிறப்பான செயல்பாட்டிற்குரிய சூழல் அமைப்பை ஏற்படுத்தித் தருவது என்பதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் வேலைவாய்ப்பை உருவாக்குதல் என்ற இந்த அரசின் தொலைநோக்குத் திட்டத்தின் இலக்கினை அடைந்திடவும் துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியமாகிறது.

### 3.4.9 முறையான கடன் (Institutional Credit)

தற்போது, கோவிட் 19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கத்திலிருந்து பொருளாதாரம் மீண்டு வரும் சூழ்நிலையில், வங்கி அமைப்புகள் மூலம் வழங்கப்படும் கடன் முறையாக கிடைக்கப்

பெறுவது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஊரக மற்றும் நகர்ப்புர ஏழை மக்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகியோருக்கு சீராகவும், குறைந்த வட்டி விகிதத்திலும், நியாயமான நிபந்தனைகளுடன் கூடிய முறையான கடன் வசதி கிடைக்கும் பட்சத்தில், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களை அதிலிருந்து உயர்த்துவதற்கும், அதீத வறுமைக்கோட்டிற்கு கீழே அவர்கள் செல்லாதவாறு தடுப்பதற்கும், தொழில் வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும். முறைசாரா அமைப்புகள் நெறிமுறையற்ற நடைமுறைகளை பின்பற்றி கடன் வழங்குவதை தடுப்பதற்கும் காரணமாகவும் இந்த முன்னெடுப்பு மிகவும் அவசியமாகிறது. இந்நேர்வில், ஆண்டு கடன் திட்டத்தின்படி (Annual Credit Plan) சம்மந்தப்பட்ட

வங்கிகள் முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்குவதை மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் நடத்தப்படும் வங்கியாளர்கள் கூட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் வறுமைக்கோட்டுக்கு கீழே எந்த குடும்பமும் இல்லை என்ற தொலைநோக்கினை தமிழ்நாடு அடைய, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் நிதி ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு தேவையான கடன் இணைப்புகளை கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாகிறது.

### 3.4.10 மரபு மற்றும் பண்பாடு

தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள், நாட்டிலுள்ள பிற மாநிலங்களை

விட அதிக நிதி ஒதுக்கீட்டுடன் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பண்டைய மதிப்புயர் பண்பாட்டினை மீண்டும் உருவகப்படுத்தி புரிந்து கொள்வதற்கு இந்த நடவடிக்கைகள் உதவுகிறது. சிவகளையில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளை Accerlerated Mass Spectrometry முறையில் காலக்கணிப்பு ஆய்வு செய்து பகுப்பாய்வு ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கை பொருநை ஆற்றங்கரை நாகரீகம் ஏறத்தாழ 3,200 ஆண்டுகள் பழமையானது என்பதை நிரூபித்துள்ளது. ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை ஆகிய பகுதிகளில் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற பண்டைய பொருள்களை, நமது பண்பாட்டினை பறைசாற்றும் விதமாக நெல்லையில் அமையப்போகும் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கீழடி அகழாய்வுப் பகுதி திறந்தவெளி அருங்காட்சியகமாக அமைக்கப்படவுள்ளது.

‘தமிழ்நாட்டு கல்வெட்டுகள்’ என்னும் தலைப்பிலான ஆறு கல்வெட்டுத் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. சார்ஜா மாடி- தஞ்சாவூர், டேனிஷ் கோட்டை, தரங்கம்பாடி, திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை ஆகிய பழங்காலக் கோட்டைகள் மற்றும் அரண்மனைகளில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

சிறப்பு வாய்ந்த மரபுகளை வெளிக்கொணர்வதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கீழ்க்கண்ட இடங்களில் முக்கியத்துவம் வாய்ந்த அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- கீழடி மற்றும் அதன் தொகுப்பு (கொந்தகை, அகரம், மணலூர் - சிவகங்கை மாவட்டம்

- ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, தூத்துக்குடி மாவட்டம் மற்றும் கொடுமணல், ஈரோடு மாவட்டம்.
- கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம்.
- மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

இத்துறை, மரபு மற்றும் பண்பாட்டின் சிறப்புகளை வெளிப்படுத்தும் பணிகளான அகழாய்வு, அருங்காட்சியகங்கள், பாதுகாப்பு (Conservation) போன்ற பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன், தொடர்புடைய துறைகளான, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள், பொதப்பணி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்யும்.

### 3.4.11. சுற்றுச்சூழல் சமநிலை

இந்தியாவின் தேசிய வனக் கொள்கை 1998-ன்படி மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில், வனபரப்பு மற்றும் மரப்பரப்பை 33 விழுக்காடாக அதிகரிப்பது என்பது இந்த அரசின் முக்கிய தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றாகும். நிலையான வளர்ச்சி இலக்கு 15-ன்படி 2030 வருடத்திற்குள் நிலத்திற்கேற்ற வாழ்வியல் முறையை அடைவது இதன் இலக்காகும். 2021-ம் ஆண்டின் மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில், வனப்பரப்பானது 20.31 சதவீதமாக உள்ளது. உலகளாவிய மற்றும் தேசிய அளவில் நிர்ணயம் செய்யப்பட்ட பசுமைப் போர்வையின் 33 சதவீத இலக்கினை அடைய மாநில அரசு தீவிரமாக முயற்சி மேற்கொண்டு வருகிறது.

2030ஆம் ஆண்டுகளுக்குள் இந்த இலக்கை அடைய பல துறைகளின் கூட்டு முயற்சி மட்டுமன்றி மக்களின் பங்களிப்பும்

அவசியமாகிறது. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம், தமிழ்நாடு நதிப் பாதுகாப்பு திட்டங்கள் போன்ற அரசின் முக்கிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆகிய பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த பங்களிப்புடன் இந்த இலக்குகளை திறம்பட விரைந்து அடைதல் அவசியமாகிறது. எனவே அரசின் இந்த சீரிய நோக்கத்தினை விரைந்து அடையவும் வகையில் பசுமைப் போர்வையின் பரப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்திடவும், உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் இப்பொருள் விவாதித்திடவும் இத்துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

### 3.4.12 தரவு நிர்வாகம் (Data Governance)

தரவு சார்ந்த நிர்வாகத்தில் (DG) நம்பகத்தன்மை கொண்ட மற்றும் பயனுள்ள தரவுகளை சேகரித்தலும் மற்றும் அத்தரவுகளின் பாதுகாப்பினை உறுதி செய்தலும் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

மேலும், சிறந்த தரவு சார்ந்த நிர்வாகம் என்பது தரவுகள் நிலைத்தன்மை கொண்டதாகவும் (Consistency) நம்பகத்தன்மை கொண்டதாகவும் மற்றும் அவை தவறாக பயன்படுத்தப்படாததையும் உறுதி செய்தல் என்பது முக்கியமானதாகும்.

தரவு சார்ந்த நிர்வாகம் கீழ்க்கண்ட கூறுகள் உள்ளடக்கியது.

- இது அரசின் நிர்வாக முடிவுகள் தரவுகளின் அடிப்படையில் (Data driven

decision making) எடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

- தரவுகளை தூய்மைப்படுத்துதல் (Data Purity) மூலம் அரசு செயல்படுத்தும் திட்டங்களில் தகுதியற்ற பயனாளிகளை அகற்றுதல்.

## தரவு சார்ந்த முடிவெடுத்தல் (Data driven decision making):

தரவுகள் அளிக்கும் தகவல்களின் அடிப்படையில் நிர்வாகத்தில் அனைத்து துறைகளிலும் அரசு சரியான முடிவுகள் மேற்கொள்வதற்கு மட்டுமன்றி, அன்றாட நிர்வாகத்தில் தேவைப்படும் மாறுதல்களையும் மேற்கொள்ள இயலும். முதலமைச்சரின் தகவல் பலகையில் பல்வேறு துறைகளின் தரவுகளை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கும் பணியில் இத்துறை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்த

ஒருங்கிணைக்கப்பட்ட தரவுகளின் மூலம் அரசு முக்கிய தரவு சார் முடிவுகளை எடுக்க இயலும்.

## தரவுகளை தூய்மைப்படுத்துதல் (Data Purity)

பல்வேறு துறைகளின் மூலம் திரட்டப்படும் தரவுகளின் நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் அரசு திட்டங்களின் பயன்கள் தகுதியுள்ள பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்ய இயலும். மேலும், தகுதியற்ற பயனாளிகளை நீக்குவதன் மூலம் அரசிற்கு தேவையற்ற நிதி இழப்புகளை தடுக்க இயலும். இதற்காக இந்த அரசு, மாநிலத்தில் முதல் முறையாக தரவு தூய்மை திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தற்போது திட்டங்கள் வாரியாக பெறப்பட்ட பயனாளிகளின் பட்டியலை அரசின் பிற நிறுவனங்கள் / துறைகளின் பயனாளிகளின் பட்டியலுடன் ஒப்பிட்டு தகுதியற்ற பயனாளிகளை அடையாளம் காண பகுப்பாய்வு செய்து வருகிறது.

இத்திட்டத்தின்படி, மின் ஆளுமை முகமை இதுவரை, கடன் தள்ளுபடி திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், பிரதம மந்திரியின் உழவர் நிதித் திட்டம் மற்றும் பொது விநியோகத் திட்டம் போன்ற திட்டங்களில் தகுதியற்ற பயனாளிகள் குறித்த விவரங்களை கண்டறிந்து அவர்களை, அத்திட்டங்களிலிருந்து நீக்குவதற்கு சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் அரசிற்கு கணிசமான நிதி சேமிப்பும் கிடைக்கும்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு உதவுவதற்காக சம்மந்தப்பட்ட துறைகளுடன் இத்துறை ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்துகிறது.

## 3.5. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/ அரசு முதன்மைச் செயலாளர்கள்/ அரசு செயலாளர்களை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அவ்வப்போது அரசு நியமிக்கிறது. கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மீது கள ஆய்வு மேற்கொண்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களை விரைவாக செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், இடையூறுகளுக்கான தீர்வுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர்.

கண்காணிப்பு அலுவலர்கள் பல்வேறு துறைகளின் முக்கிய திட்டங்களை ஆய்வு மேற்கொள்கின்றனர். அதற்கான ஆய்வுப் படிவங்கள், கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்புக்கு ஏற்றவாறு இருக்கும்.

இதனுடன் கண்காணிப்பு அலுவலர்கள் முதன்மைத் திட்டங்களையும் தனியாக ஆய்வு மேற்கொள்வார்கள்.

கண்காணிப்பு அலுவலர்கள் துறைகளுக்கிடையேயான பிரச்சனைகளை களைவதற்கு ஏதுவாக துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அரசு அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைப்பர். கண்காணிப்பு அலுவலர்கள் முக்கியமான கருத்துக்கள், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாட்டிற்குத் தேவைப்படும் மாற்றங்கள் குறித்த பரிந்துரைகளோடு ஆய்வறிக்கையினை வழங்குவர். மாவட்ட ஆய்வின்போது கண்காணிப்பு அலுவலர்களின் குறிப்புகளை பெறுவதற்காக தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வுப் படிவங்கள் இத்துறையால் உருவாக்கப்படும்.

கண்காணிப்பு அலுவலர்களின் குறிப்புகள் / பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு உயர் அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்படும்.

### 3.6. கள ஆய்வுகள்

பல்வேறு துறைகளிலிருந்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் பணிபுரியும் அலுவலர்கள், அவ்வப்போது கள ஆய்வு பணிகளை மேற்கொள்வதுடன் முதன்மைத் திட்டங்களின் செயல்பாடுகள், சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகள், அறிவிப்புகள் மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை அறிக்கைகளாக அரசுக்கு சமர்ப்பிப்பார்கள்.

## 4. முக்கிய செயல்திறன் குறியீடுகள் (Key Performance Indicators)

அனைத்து நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்ட நடவடிக்கைகளின் பொருத்தமான முக்கிய செயல்திறன் குறியீடுகளை கண்டறிவதன் மூலம் மாநிலத்தின் கொள்கை மற்றும் திட்டங்களின் செயல்பாடுகளை அளவிட முடியும். இவை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 7 தொலைநோக்கு இலக்குகளை 10 ஆண்டுகளில் அடைவதற்கு வழிவகை செய்யும்.

அரசின் தொலைநோக்கு இலக்குகளை அடைவதற்கு, அனைத்துத் துறைகளின் திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்குரிய முக்கிய செயல்திறன் குறியீடுகளை உருவாக்கும் பணி இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்துறை தமிழ்நாடு மின்னாளுமை முகமையுடன் இணைந்து அனைத்துத் துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் ஆய்வுப் படிவங்களில் சிறப்பு கூறுகளை வெளிக் கொண்டு வரும் வகையில் ஆய்வு படிவங்களை சீரமைத்து இறுதி செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது. திட்டங்களின் முன்னேற்றத்தை காட்டும் இச்சிறப்பு கூறுகளே முக்கிய செயல்திறன் குறியீடுகள் ஆகும். இக்குறியீடுகள் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தபடுவதை கண்காணிக்க உதவும். அரசின் மின்னாளுமை செயல்படுத்தலில் ஒரு பகுதியாக முக்கிய செயல்திறன் குறியீடுகள் முதலமைச்சரின் தகவல் பலகையில் இடம் பெறும்.

முக்கிய செயல்திறன் குறியீடுகளை கண்டறிவது மற்றும் தொடர்ந்து கண்காணிப்பது, நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இந்தியக் குறியீட்டெண், நல்லாளுமை குறியீட்டெண்

(Good Governance Index) மற்றும் பல்வேறு தேசிய மற்றும் உலகளாவிய நிறுவனங்கள் மூலம் வெளியிடப்படும் குறியீட்டெண்களில் மாநிலம் முதன்மை இடம் பெற வழி வகை செய்யும்.

## 5. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன் முயற்சிகள்

பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பது மட்டுமல்லாது, அரசின் சில தனித்துவ முயற்சிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படும். சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை இந்த முன்முயற்சிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைக்கும்.

### 5.1. 'நான் முதல்வன்'- தமிழ்நாட்டில் திறன் வளர்ப்பு பயிற்சியினை வலுப்படுத்த சிறப்பு முயற்சிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மனிதசக்தியின் தரத்தினை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு

வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், புதிய தலைமுறை இளைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கவும். 01.03.2022 அன்று 'நான் முதல்வன்' எனும் முதன்மைத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் செல்லும் மாணவர்கள், அதே போன்று மேல்நிலைப் பள்ளிகளுக்கு செல்லாத மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் திறன் மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய பகுதிகளாகும். பள்ளிக் கல்வி, உயர்கல்வி, திறன் மேம்பாட்டுக் கழகம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் ஆலோசகர்கள், தொழில் சார்ந்த வழிகாட்டும் வல்லுநர்கள், வழிகாட்டிகள், கல்வியாளர்கள், பயிற்சி நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள் ஆகிய பங்குத்தாரர்களுக்கு ஒருங்கிணைந்த உகந்த சூழலை (Integrated

Ecosystem) உருவாக்குவது என்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், உயர்கல்வி குறித்த தகவல்களை வழங்கி மாணவர்களுக்கு வழிகாட்டுதல், தொழில் ஆலோசனை மையங்கள் (Career Counselling Centres) அமைத்தல், ஆசிரியர்களை ஆலோசகர்களாக உருவாக்குதல், பள்ளி மாணவர்களுக்கு ரோபோட்டிக்ஸ், கணினி குறியீட்டு முறைகள் (Coding), தரவுப் பகுப்பாய்வுகள் போன்ற பயிற்சிகள் அளித்தல், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் ஆலோசனை முகாம்கள் நடத்துதல், கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் மற்றும் கல்விக் கடன்கள் குறித்த தகவல்களை வழங்குதல், போட்டி நுழைவுத் தேர்வுகளுக்கான ஆயத்த பயிற்சி வகுப்புகளை நடத்துதல், தொழில் முனைவோருக்கான அலகு மற்றும் திறன்

மேம்பாட்டுக்கான அலகுகளை உருவாக்குதல், சாதனையாளர்களைக் கொண்டு வழிகாட்டி நிகழ்ச்சிகள் மற்றும் கோடைக்கால முகாம்களை நடத்துதல், ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை பள்ளிக் கல்வித் துறை மேற்கொள்ளும்.

இதேபோல் கல்லூரி மாணவர்களுக்கு கூடுதல் படிப்புகள் வழங்குதல். வேலை வாய்ப்புகளை வழங்குதல், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த ஆசிரியர்களுக்கான பயிற்சி, தொழில்துறைத் தேவைகளின் அடிப்படையில் பாடத்திட்டங்களை மாற்றி அமைத்தல், வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட படிப்புகள், 21-ஆம் நூற்றாண்டின் திறன்கள், தனிநபர் ஆளுமை மேம்பாட்டிற்கான படிப்புகள், வெளிநாட்டு மொழிகளைக் கற்பித்தல் மற்றும் ஆங்கிலத் மொழித்திறனை மேம்படுத்துதல், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும்

மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல், நேர்முகத் தேர்விற்கான திறன்கள், பேச்சுத் திறன், தனிநபர்களுக்கிடையிலான உறவு (Interpersonal Relationships) மற்றும் குழுப்பணி, எடுத்துரைக்கும் திறன்கள், சிக்கல்களைத் தீர்க்கும் திறன்கள், அளவுசார் திறனாய்வு மற்றும் பகுத்தறியும் திறன், தொழில்முனைவோர் திறன்கள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உயர்கல்வித் துறை மேற்கொள்ளும். மேலும், மாணவர்களை கல்லூரிகளிலிருந்து பெருநிறுவனங்களில் பணியமர்த்துவதற்கான இணைப்புத் திட்டங்கள், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல், பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளில் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்து வழிநடத்துதல், உலகெங்கிலும் உள்ள பல்வேறு சிறப்பு மையங்களில் மாணவர்கள் சேர்க்கைக்கு உதவுதல் ஆகியவற்றின் மூலம் மாணவர்கள் வேலை வாய்ப்பினை பெற இத்துறை உதவிடும்.

தகவல் தொழில்நுட்பத் துறை, நாஸ்காம் போன்ற அமைப்புகளுடன் கலந்தாலோசித்து அவற்றின் உதவியுடன் தொழில் சம்பந்தப்பட்ட பயிற்சித் தொகுப்புகளை கண்டறிந்து மேம்படுத்துதல், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இணையதளங்களை உருவாக்குதல், கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டுக் முறைகளை உருவாக்குதல், பயிற்சிக்கான படிப்புகள் மற்றும் பாடத்திட்டங்களை கண்டறிதல், ஐ.சி.டி அகாடமி மூலம் பயிற்சி அளித்தல், மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை ஊக்குவித்தல். உலகெங்கிலும் உள்ள தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப இணையவழி வேலை வாய்ப்பு முகாம்களை நடத்துதல், தொடர் இணையவழி நிகழ்வுகளை நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திறன் பயிற்சிகளை ஒருங்கிணைக்கும் முகமையாக செயல்படும். இம்முகமை, கல்வித்துறை மற்றும் தொழில்துறைகளுடன் கலந்து ஆலோசித்து தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப புதிய திறன் பயிற்சித் தொகுதிகளை தொடர்ந்து உருவாக்கும். மேலும், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்டங்களை புதுப்பிக்க சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்துறை கூட்டமைப்புகளுடன் இம்முகமை இணைந்து செயல்படும். மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் தவிர, சிறப்பு மையங்களை உருவாக்குதல், பெருநிறுவனங்களுடன் இணைந்து வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலுள்ள பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் செயல்திறனை தொடர்ந்து மதிப்பீடு செய்தல் மற்றும் பயிற்சி பெற்ற இளைஞர்கள் பணியமர்த்தப்படுவதை

ஒருங்கிணைந்த திறன் பதிவேட்டினை (Unified Skill Registry) பராமரித்து கண்காணித்தல் ஆகியவை 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் பிற முக்கிய பணிகள் ஆகும்.

இந்த அரசின் முதன்மை திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தை திறம்பட செயல்படுத்திட இத்திட்டத்தில் உள்ள பல்வேறு கூறுகளை நேரடியாக செயல்படுத்தும் துறைகளுக் கிடையேயான ஒருங்கிணைப்பை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஏற்படுத்தும்.

## 5.2. விளிம்பு நிலை மக்களின் நலம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.11.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், பூஞ்சேரி கிராமத்தில் உள்ள நரிக்குறவர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளுக்குச் சென்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை

வழங்கினார்கள். இந்த உன்னதமான செயலின். தொடர்ச்சியாக, விளிம்புநிலைப் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் சென்றடையும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நரிக்குறவர்கள், பழங்குடியினர் மற்றும் இதர விளிம்புநிலை மக்களின் தேவைகளைக் கண்டறிந்து, தேவைக்கேற்ப தனிநபர் நலத்திட்ட உதவிகள் மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உத்தரவிட்டார்கள்.

அதன்படி, விளிம்பு நிலை மக்கள் வசிக்கும் பகுதிகளை மேம்படுத்திடவும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையிலும், குடும்பத்திற்கான தேவைகள், தனி நபர் தேவைகள் மற்றும் பொதுவான உட்கட்டமைப்புத் தேவைகள் ஆகியவற்றைக் கண்டறியும்

பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொண்டனர்.

இத் தேவைகள் மதிப்பீடு பட்டியல், கான்கிரீட் வீடு, கழிப்பறை வசதி, வீட்டுக் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு, வீட்டு மனைப்பட்டா, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், நலவாரிய அடையாள அட்டைகள், மாற்றுத் திறனாளி அட்டை, முதியோர் ஓய்வூதியம், மாற்றுத் திறனாளி ஓய்வூதியம், கணவரால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், திருமணமாகாத பெண்களுக்கான ஓய்வூதியம், மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் சாலை வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி, வடிகால் வசதி, திறன் மேம்பாட்டு பயிற்சி போன்ற தேவைகளை உள்ளடக்கியதாகும்.

அதன்படி, தற்போது செயல்பாட்டில் உள்ள திட்டங்களின் மூலமாக, அனைத்து

மாவட்டங்களிலும் 4,859 கான்கிரீட் வீடுகள், 3,563 கழிப்பறை வசதிகள், 5,741 வீட்டுக்கான குடிநீர் இணைப்புகள், 817 மின் இணைப்புகள், 9,632 வீட்டு மனைப்பட்டாக்கள், 23,836 வாக்காளர் அட்டைகள், 11,387 குடும்ப அட்டைகள், 32,045 சாதி சாதன்றிதழ்கள், 13,882 நலவாரிய அட்டைகள், 728 மாற்றுத் திறனாளி அட்டைகள், 4,444 முதியோர் ஓய்வூதியம், 596 மாற்றுத்திறனாளி ஓய்வூதியம், 353 கணவரால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியம், 1,715 விதவை ஓய்வூதியம், 65 திருமணமாகாத பெண்களுக்கான ஓய்வூதியம், 6,978 மருத்துவ காப்பீட்டு அட்டைகள், 26,176 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட (MGNREGS) வேலை அட்டைகளும் மற்றும் 3,149 நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தொடர்புடைய துறைகள் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும், பொது உட்கட்டமைப்பு வசதிகளான, 321 சாலை பணிகள், 1,562 தெரு விளக்குகள், 564 குடிநீர் பணிகள்,

422 வடிகால் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேவை மதிப்பீடு பட்டியலின்படி அனைத்து நலத்திட்ட உதவிகளையும் விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.3. தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் (Tamil Nadu Chief Minister's Fellowship Programme)

மாநில அரசின் பல்வேறு முக்கிய மற்றும் முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு தொழில் மற்றும் கல்விப் பின்புலத்தைச் சேர்ந்த இளம் வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தை (2022-2024) செயல்படுத்துவதற்கு சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

ஒருங்கிணைப்புத் துறையாகவும், திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தை கல்விப் பங்காளராகவும் கொண்டு செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.3, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நாள்: 04.03.2022ல் அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தை, 2022-24ல் செயல்படுத்திட திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- கல்விப் பங்காளரான பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனம் இளம் வல்லுநர்களை தேர்வு செய்வதற்கான பணியினை மேற்கொள்ளும். இந்நிறுவனம், இளம் வல்லுநர்களை தேர்வு செய்யும் அனைத்து செயல்முறையும் வலுவான,

வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் மேற்கொள்ளும்.

- தேர்ந்தெடுக்கப்படும் இளம் வல்லுநர்களுக்கு மாதந்தோறும் ரூ.65,000 ஊதியமும், ரூ.10,000 கூடுதல் படியும் வழங்கப்படும்.

- கல்விப் பங்காளரான பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனம் இளம் வல்லுநர்களை தெரிவு செய்த பிறகு பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்:

  - தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் வல்லுநர்களுக்கு ஆரம்ப நோக்குநிலை பயிற்சி வழங்குதல்;

  - இளம் வல்லுநர்களுக்கு ஒரு கல்வி வழிகாட்டி / வழிகாட்டியை ஒதுக்கீடு செய்தல்;

- பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில் உள்ள கல்வி உள்ளீடுகளை கொண்டு வகுப்பறை மற்றும் நிகழ்நிலை வகுப்புகள் வாயிலாக தொடர்ச்சியான வழிகாட்டுதலுடன் அவர்களின் திறமைகளை வளர்ப்பது;
- அவர்களின் செயல்திறனை அவ்வப்போது மதிப்பீடு செய்வது மற்றும் தனிப்பட்ட தேவை அடிப்படையிலான வழிகாட்டுதலை வழங்குவது; மற்றும்
- அவர்களுக்குள் ஒரு போட்டி மனப்பான்மையை வளர்த்து தகுதியான செயல்திறனை வளர்ப்பது.

➢ சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, பாரதிதாசன் மேலாண்மை கல்வி

நிறுவனத்துடன் இணைந்து புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு சென்னையில் 30 நாட்கள் நோக்குநிலை பயிற்சி நடத்தப்படும்.

- பயிற்சி திருப்திகரமாக முடித்தவுடன், மாநில அரசின் முதன்மை / முன்னுரிமைத் திட்டங்கள் மற்றும் துறை சார்ந்த திட்டங்களின் கருப்பொருளைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் வல்லுநர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். அவர்களுக்கான ஒதுக்கீட்டின்படி, முதலமைச்சர் அலுவலகம் / தொடர்புடைய துறைகளின் கீழ் அவர்கள் பணியாற்றுவார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை கண்காணித்தல், அவற்றிலுள்ள இடையூறுகளை அடையாளம் காணுதல், அவற்றிற்கு தரவு சார்ந்த முடிவுகளை

எடுப்பதின் வாயிலாக அத்திட்டத்தின் இடைவெளிகளை நிவர்த்தி செய்து சேவை வழங்கலை மேம்படுத்துவது ஆகியவை அவர்களின் முதன்மையான பணியாகும். அவர்கள் மாவட்டங்களுக்கு களப் பயணங்களை மேற்கொண்டு களத்திலுள்ள உண்மை நிலவரத்தை மதிப்பீடு செய்து பின்னூட்டங்களை பெற்று அவற்றிற்கு பொருத்தமான தொடர் நடவடிக்கைகளில் உதவி செய்வார்கள்.

- இந்த இரண்டு ஆண்டுகால புத்தாய்வுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் வல்லுநர்கள் பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் மூலம் பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மை பாடத்திட்டத்தில் ஒரு முதுகலை சான்றிதழைப் பெறுவார்கள். மேலும், புத்தாய்வுத் திட்டத்தில் உள்ள முதுகலைப்

பட்டம் பெற்ற வல்லுநர்கள், முனைவர் பட்டப்படிப்பிற்கான குறைந்தபட்சத் தகுதித் கொண்டிருந்தால் அவர்களுக்கு பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் புத்தாய்வுத் திட்டதில் பங்குபெறும்போதே முனைவர் பட்டப்படிப்பில் சேரும் வாய்ப்பு வழங்கப்படும்.

- தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தினை (2022-24) செயல் படுத்துவதற்காக இளம் வல்லுநர்களை தெரிவு செய்யும் பணி விரைவில் தொடங்கப்படும்.

**மாணவர்களுக்கான நிர்வாகச் செய்முறைப் பயிற்சித் திட்டம் (Students Internship Programme)**

முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்திற்கு துணை புரியும் வகையிலும், வலுசேர்க்கும் வகையிலும், மாணவர்களுக்கான நிர்வாகச் செய்முறைப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்

படவுள்ளது. கருப்பொருள் கண்காணிப்பிற்கு உதவிடும் வகையில் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்படும். பல்கலைகழகங்கள் மற்றும் கல்லூரிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு, கண்டறியப்பட்ட பல்வேறு பிரிவுகளில் குறுகிய கால திட்டப்பணி வழங்கப்படும். இது மிகவும் திறமை வாய்ந்த மாணவர்களுக்கு அரசின் செயல்பாடுகளில் செயல்முறை அனுபவம் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாகவும் மற்றும் வளர்ச்சித்திட்ட நடவடிக்கைகளில் அரசு-மாணவர்கள்-கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையேயான இணைப்பினை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.4. முதலமைச்சரின் தகவல் பலகை (Chief Minister's Dashboard)

தரவுகளை கொண்டு முடிவுகளை மேற்கொள்வதே சமீபத்திய உலகளாவிய

நல்லாளுமைக்கான கொள்கையாக பரிந்துரைக்கப்படுகிறது. தமிழ்நாடு, நல்லாளுமையில் முன்னோடி மாநிலம் ஆகும். குடிமக்களின் தேவைகளை அரசு புரிந்து அதனடிப்படையில் திறம்பட செயலாற்றிட தகவல் தொழில்நுட்பம் வழி வகை செய்கிறது. மின்னணு கண்காணிப்பு மற்றும் மின்னாளுமையில் முதலமைச்சரின் தகவல் பலகை ஒரு திறன்மிகு தகவல் தொழில்நுட்ப கருவியாக செயல்படுகிறது.

முதலமைச்சரின் தகவல் பலகை தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.12.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. தகவல் பலகை, துறை சார்ந்த அணுகலையும் தேவைக்கேற்ற அறிக்கை மற்றும் அறிவிக்கைகளை வழங்கும். இத்துறையும், தமிழ்நாடு மின்னாளுமை முகமையும் இணைந்து அனைத்து துறைகளுடன் முக்கிய செயல் குறியீடுகளை கண்டறிந்து

அதனை முதலமைச்சரின் தகவல் பலகையுடன் இணைக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இயக்கநிலை தரவுகளுடன் (Dynamic Data) கூடிய முக்கிய செயல் குறியீடுகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு பிரிவுகளில் உள்ள முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கும், கண்காணிப்பதற்கும் மற்றும் அனைத்து பிரிவுகளின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதற்கும் வழிவகை செய்யும்.

### 5.6. கள ஆய்வுகள் கண்காணிப்பு கைபேசி மென்பொருள் செயலி

பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் பயன்கள் சிறந்த முறையில் சென்றடைவதற்குரிய தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அரசுத்துறைகளில் பணிபுரியும் களப்பணி

அலுவலர்கள் ஆய்வுகள்/விரிவாக்க செயல்களை மேற்கொண்டு தங்களது அறிக்கைகளை மேல்நிலை அலுவலர்களுக்கு சமர்பிக்கின்றனர். அதிக எண்ணிக்கையில் இந்த கள ஆய்வு அறிக்கைகள் பெறப்படுவதால் உயர் அலுவலர்கள் உரிய நேரத்தில் ஆய்வு செய்து கண்காணிப்பதிலும், அதன் மீது உடனுக்குடன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும் சிரமம் ஏற்படுகிறது. எனவே களப்பணி அலுவலர்கள், உயர் அலுவலர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் மற்றும் விரிவாக்க செயல்களை கண்காணிக்கும் தற்போதைய முறைகளை, தற்போதுள்ள தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் சீரமைத்து கைபேசி செயலி வாயிலாக கண்காணிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அதனால், பின்வரும் பயன்கள் ஏற்படும்.

- ஆய்வுகள்/விரிவாக்கச் செயல்களின் நிகழ்நேர கண்காணிப்பு.

- ஆய்வுப் பகுதிகளை மைய இடத்திலிருந்து ஒதுக்கீடு செய்து புவி சார் குறியீடுகளை பயன்படுத்தி கண்காணிப்பது.

- கள ஆய்வு அறிக்கைகள் மற்றும் புகைப்படங்களை எவ்விடத்திலிருந்தும் மின்னணு கருவிகள் வாயிலாக பார்க்க இயலும்.

- ஆய்வு அறிக்கைகள் மற்றும் அறிக்கைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை (Action Taken Reports) குறித்து கண்காணிப்பதும் எளிதாகும்.

- ஆய்வு அறிக்கைகளை நாட்குறிப்பாக பயன்படுத்துவது.

➢ துறையின் வலைதளத்துடன் ஒன்றிணைந்து பகுப்பாய்வு அறிக்கைகளை ஆய்வுக்காக பயன்படுத்துவது.

இச்செயலியானது, தேசிய தகவல் மையம் (NIC), சென்னை, மூலம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் பல்வேறு துறைகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாற்றி வடிவமைத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

துறைகளின் தேவைகளுக்கேற்ப இச்செயலி வடிவமைக்கப்படுவதற்கு, தொடர்புடைய துறைகள் மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

## முடிவுரை

இந்த அரசு, தமிழ்நாட்டை தேசிய அளவில் முதன்மை மாநிலமாக மாற்றுவதோடு

மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளில், வளர்ந்த நாடுகள் அடைந்துள்ள வளர்ச்சிக்கு இணையான வளர்ச்சியினை அடைவதற்கும் உறுதி கொண்டுள்ளது.

இந்த உயரிய நோக்கத்தினை அடைவதற்காக, பல்வேறு திட்டங்களை அரசு, பொருளாதார மேம்பாடு, வேளாண்மை, நீர்வள ஆதாரங்கள், கல்வி மற்றும் சுகாதாரம், நகர்ப்புர மேம்பாடு, ஊரக உட்கட்டமைப்பு மற்றும் சமூக நீதி ஆகிய முக்கிய இனங்களில் மாநிலத்தில் வளர்ச்சியினை விரைவுப் படுத்துவதற்காக அறிவித்துள்ளது. இந்த நோக்கத்தின் அடிப்படையில் புதிய திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகளான நான் முதல்வன், கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டு இயக்கம், தமிழ்நாடு பசுமை இயக்கம், இல்லம் தேடிக் கல்வி, மக்களை தேடி மருத்துவம்,

இன்னுயிர் காப்போம், நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம், மகளிருக்கு இலவச பேருந்துப் பயணம் போன்ற திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. இவற்றுடன் பல நலத்திட்டங்களும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், தொழில் துறை வளர்ச்சிக்கு சாதகமான சூழலை உருவாக்கவும், அதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும் இந்த அரசு உறுதி கொண்டுள்ளது.

இதன் மூலம் தொழில் துறையில் விரைவான வளர்ச்சியினை உறுதி செய்யும் வகையிலும், மாநிலத்தில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையிலும், இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

அரசின் இம்முயற்சிகளுக்கு உறுதுணையாக மாநிலத்தின் நலனுக்காக அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணித்தும், சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்தும், மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட இத்துறை உறுதி கொண்டுள்ளது.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**